தினமணி

## தமிழ்நாடு அறிவியலறிஞர் விருதுகள் அறிவிப்பு

First Published : 24 Mar 2012 01:54:21 AM IST

சென்னை, மார்ச் 23: தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் சார்பில் 2011-ம் ஆண்டுக்கான தமிழக அறிவியலறிஞர் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த விருதுடன் தலா ரூ.10 ஆயிரம் பரிசும் வழங்கப்படும்.

விருது பெற்றவர்கள் விவரம்:

1. வேளாண்மையியல் - மு.பரமாத்மா, ஆய்வு இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை.
2. உயிரியல் - ஆ.ஞானமணி, நுண்ணுயிரியல் துறைத் தலைவர், மத்திய தோல் ஆய்வு நிறுவனம், சென்னை.
3. வேதியியல் - க.நடராசன், சிறப்புநிலை ஆய்வாளர், வேதியியல் துறை, பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.
4. சுற்றுச்சூழலியல் - இல.இளங்கோ, புவியியல் துறை பேராசிரியர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.
5. பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் - செ.முரளிதரன், முதுநிலை அறிவியலாளர், மத்திய தோல் ஆய்வு நிறுவனம், சென்னை.
6. கணிதவியல் - தமிழ்ச்செல்வம், கணிதவியல் துறை பேராசிரியர், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.
7. மருத்துவம் - சௌம்யா சுவாமிநாதன், அறிவியலாளர், மருத்துவ ஆய்வுத் துறை, தேசிய எலும்புருக்கி நோய் ஆய்வு மையம், சேத்துப்பட்டு.
8. இயற்பியல் - டி.மங்கலராசன், நானோ அறிவியல் தொழில்நுட்பவியல் பேராசிரியர், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.
9. கால்நடை அறிவியல் - சே.நா.சிவசெல்வம், பேராசிரியர், விலங்கு மரபியல் மற்றும் கலப்பினத் துறை, சென்னை கால்நடை அறிவியல் கல்லூரி.

இந்த விருது வழங்கும் விழா பின்னர் நடைபெறும் என்று தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் அறிவித்துள்ளது.

**பசுமை வீடு: குடிசைவாசிகளுக்கு முன்னுரிமை வழங்க வலியுறுத்தல்**

First Published : 24 Mar 2012 12:58:27 PM IST

அரியலூர், மார்ச் 23: பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தில் குடிசைகளில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று திருமானூர் ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியக் குழுக் கூட்டம் அதன் தலைவர் சீனிவாசன் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது. துணைத் தலைவர் குமரவேல், ஆணையர் ஸ்ரீதரன் முன்னிலை வகித்தனர்.

இந்தக் கூட்டத்தில் ஒன்றியக் குழு உறுப்பினர்கள் பலர் பங்கேற்று தங்களது கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

கீழகாவட்டாங்குறிச்சி ஒன்றியக்குழு உறுப்பினர் அறிவழகன் பேசியது:

பசுமை வீடு திட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தேர்வு செய்யும் போது குடிசைகளில் வசிப்பவர்களுக்குப் பதிலாக ஓட்டுவீடு, மாடிவீடு வைத்துள்ளவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

இதனை கவனத்தில் கொண்டு, குடிசைகளில் வசிப்பவர்களைக் கண்டறிந்து அவர்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

குந்தவெளியில் உள்ள பொது கிணற்றில் துர்நாற்றம் வீசுவதால் அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கு நோய் பரவும் நிலை உள்ளது.

எனவே உடனடியாக கிணற்றை தூர்வார வேண்டும் அல்லது மூட வேண்டும் என்றார் அவர்.

கோவிலூர் குழு உறுப்பினர் சரவணன் பேசிய போது, கோவிலூர்- ஆண்டிப்பட்டாக்காடு சாலை, ஆண்டிபட்டாக்காடு- சின்னப்பட்டாக்காடு சாலை மிகவும் மோசமாக உள்ளது. இந்த சாலைகளை விரைவில் சீரமைக்க வேண்டும் என்றார் அவர்.

இந்தக் கூட்டத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜேந்திரன், செந்தில்குமார், உதவிச் செயற்பொறியாளர் காமராஜ் உள்ளிóட்டோர் பங்கேற்றனர். கிராம வளர்ச்சி அலுவலர் கபிலன் நன்றி கூறினார்.

---

தினகரன்

## வெள்ளரிக்காய் அறுவடை அமோகம்

பதிவு செய்த நேரம்:2012-03-24 11:54:47

தர்மபுரி: கோடையில் சுட்டெரிக்கும் வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க தர்மபுரியில் வெள்ளரிக்காய் விற்பனை சூடுபிடித்துள்ளது. தினமும் 1 டன் வெள்ளரிக்காய் விற்பனை செய்யப்படுகிறது.

தர்மபுரி மாவட்டத்தில் காரிமங்கலம், பாலக்கோடு, பென்னாகரம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய இடங்களில் 500 ஏக்கரில் வெள்ளரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 3 மாதம் பயிர் என்பதால் விவசாயிகள் விரும்பி சாகுபடி செய்கின்றனர். ஏக்கருக்கு 6 டன் முதல் 8 டன் வரை மகசூல் கிடைக்கிறது. தற்போது கோடைக்காலம் என்பதால் வெள்ளிக்காய் அறுவடை சீசன் தொடங்கி உள்ளது. ஒரு வெள்ளரிக்காய் ரூ3 முதல் ரூ10 வரை விற்பனை செய்யப்படுகிறது. கிலோ ரூ15 முதல் ரூ30 வரையும் விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரி கூறும்போது:

தர்மபுரி மாவட்ட சாம்பார் வெள்ளரிக்காய் கேரளாவில் பெயர் பெற்றது. கொச்சி சந்தைக்கு விற்பனை செல்கிறது. அது போல் கோவைக்கும் தர்மபுரி சாம்பார் வெள்ளரி செல்கிறது. சாம்பார் வெள்ளரிக்காயுடன், நாட்டு வெள்ளரிக்காயும் தற்போது அறுவடை சீசன் தர்மபுரி மாவட்டத்தில் தொடங்கி உள்ளது. தர்மபுரியில் ஒரு நாளைக்கு 1 டன் வெள்ளரிக்காய் விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளரிக்காய் சாப்பிட்டால், கோடைக்காலத்தில் நல்ல செரிமானம் ஏற்படும். பித்தத்தை தணித்து குடல்களை குளிர்ச்சியாக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## காரட் அறுவடை தீவிரம்

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-03-24 11:07:01

மஞ்சூர்: நீலகிரி மாவட்டம் மஞ்சூர் அருகே உள்ள எமரால்டு, இத்லார், நஞ்சாடு, முத்தரை பாலடா, கள்ளக்கொரை, அட்டுப்பாயில் சுற்றுவட்டார பகுதிகளில் தேயிலை விவசாயத்துடன் பெருமளவு மலைக்காய்கறிகள் பயிரிடப்பட்டு வருகிறது. தற்போது இப்பகுதிகளில் உருளை கிழங்கு முட்டைகோஸ், முள்ளங்கி, பீட்ரூட் உள்ளிட்டவற்றுடன் அதிகளவு கேரட்டுகளை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். இந்நிலையில் கடந்த சில மாதங்களாகவே இப்பகுதிகளில் மழை

பெய்யாததால் கடும் வறட்சி நிலவி வருகிறது. வறட்சியின் தாக்கத்தில் இருந்து பயிர்களை பாதுகாக்க காலை, மாலை இரு வேளைகளிலும் விவசாயிகள் தங்களது தோட்டங்களுக்கு நீர்பாய்ச்சி வந்தனர். இதன் காரணமாக நல்ல மகசூல் கிடைத்தது. தற்போது தோட்டங்களில் பயிரிடப்பட்டிருந்த காரட்டுகளை சூழ்ந்துள்ள மண் மற்றும் களைகளை நீக்கி நன்கு சுத்தப்படுத்திய பின் மூட்டைகளில் அடைத்து ஊட்டி, குன்னூர் மற்றும் வெளிமாவட்டங்களுக்கு விற்பனைக்கு கொண்டு செல்வதில் தீவிரமாக இறங்கி உள்ளனர்.

## உளுந்து பயிரை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறை விவசாயிகளுக்கு யோசனை

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-03-24 11:05:30

சேதுபாவாசத்திரம்: சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள உளுந்து பயிரில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டது. சேதுபாவாசத்திரம் வட் டார வேளாண்மை உதவி இயக்குனர் மதியரசன் வெளியிட்டுள்ள அறிக்கை:

உளுந்து பயிரை தாக்கும் பூச்சிகளில் தண்டு ஈ, அசுவிணி, தத்துப்பூச்சி, வெள்ளை ஈ ஆகியவை மிக முக்கியமான பூச்சிகளாகும். தண்டு ஈ தாக்குதலால் செடிகள் முற்றிலும் காய்ந்து விடும். இதை கட்டுப்படுத்த மானோகுரோட்டோபாஸ் மருந்தை விதைத்த 7ம் நாள் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி. என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். வளர்ச்சி பருவத்தின்போது பாக்கும் அசுவிணி, தத்துப்பூச்சி, வெள்ளை ஈ ஆகியவற்றை கட்டுப்படுத்த மீத்தைல் டெமட்டான் அல்லது தைமீத்தோயேட் அல்லது பாஸ்போமிடான் இதில் ஏதாவது ஒரு மருந்து 2 மி.லியை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். மப்பும் மந்தாரமான வானிலையில் அசுவிணியின் தாக்குதல் அதிக மாக இருக்கும். இதற்கு டைக்குளோர்வார்ஸ் 2 மி.லி. மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். நோய்களை பொருத்தமட்டில் மஞ்சள் தேமல் நோய், வாடல் நோய், வேர் அழுகல் நோய், சாம்பள் நோய் ஆகியவை முக்கியமானதாகும். மஞ்சள் தேமல் நோய் தென்பட்டால் உடனே பயிரை பிடுங்கி அப்புறப்படுத்துவதே சிறந்த கட்டுப்பாடாகும். வாடல் நோய் மற்றும் வேர் அழுகல் நோய் தாக்கிய செடிகளை பிடுங்கி அகற்றி அந்த இடத்தில் பாவிஸ்டின் 10 கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து கரைசலை ஊற்ற வேண்டும். இதனால் நோய் பரவாமல் தடுக்கலாம். சாம்பல் நோய் தென்படும் இடங்களில் 1 லிட்டர் தண்ணீரில் நனையும் கந்தகத்தூள் 10 கிராம் மருந்தை கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.